## Indian Polity Model Test Questions 14 in Tamil With Answer

1. கீழ்க்கண்டவைகளில் எவை பிரதமரின் அலுவலகத்திலிருந்து நேரடியாக கையாளப்படுகிறது?

   1. பிரதமரின் தேசிய நிவாரண நிதி 2. தேசிய பாதுகாப்பு நிதி

   இவற்றுள்

   அ. 1 மட்டும் ஆ. 2 மட்டும் **இ. 1 மற்றும் 2** ஈ. எதுவுமில்லை

2. பட்டியல் 1ஐ பட்டியல் 2 உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

   | பட்டியல் 1 | பட்டியல் 2 |
   |---|---|
   | அ. முதல் ஐந்தாண்டுத் திட்டம் | 1. தன்னிறவு பெறுதல் |
   | ஆ. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் | 2. வேளாண்மை மற்றும் தொழில் வளர்ச்சி |
   | இ. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் | 3. வேளாண்மை வளர்ச்சி |
   | ஈ. நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் | 4. கனரகத் தொழில் வளர்ச்சி |

   குறியீடுகள்:

   | | அ | ஆ | இ | ஈ |
   |---|---|---|---|---|
   | அ. | 2 | 4 | 1 | 3 |
   | ஆ. | 1 | 2 | 3 | 4 |
   | இ. | 3 | 4 | 2 | 1 |
   | **ஈ.** | **3** | **4** | **1** | **2** |

3. கீழ்க்கண்டவற்றில் எது சரியாகப் பொருந்துகிறது?

   அ. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் - வேலை வாய்ப்பை உருவாக்குதல்

   ஆ. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் - வறுமை ஒழிப்பு மற்றும் சுயசார்பு

   **இ. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் - 2000ல் முழு வேலை வாய்ப்பை சாதிக்கும்**

   ஈ. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் - சமூக நீதியுடன் வளர்ச்சி மற்றும் சமத்துவம்

4. நிதிக்குழுவின் தலைவரை நியமனம் செய்வது

   **அ. குடியரசுத் தலைவர்** ஆ. பிரதம அமைச்சர்

   இ. மக்களவை சபாநாயகர் ஈ. நிதி அமைச்சர்

5. கீழ்க்கண்ட பிரதம அமைச்சர்களை கால வரிசைப்படுத்துக:

   1. திரு. சரண்சிங் 2. திரு. வி.பி. சிங்

   3. திரு.லால்பகதூர் சாஸ்திரி 4. திரு. சந்திரசேகர்

இவற்றுள்

**அ. 3, 1, 2 & 4** ஆ. 4, 2, 3 & 1 இ. 2, 3, 4 & 1 ஈ. 4,3,1 & 2

6. பின்வருவனவற்றுள் இந்திய துணை குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவசியமான தகுதி அல்லாதது எது?

அ. அவர் இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்

**ஆ. அவருக்கு இந்தி பேசவும்,படிக்கவும், எழுதவும் தெரிந்திருக்க வேண்டும்**

இ. அவர் 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்

ஈ. அவர், மாநிலங்களவையில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும்

7. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருந்தும்?

அ. இந்திய திட்டமிடலின் தந்தை - காந்திஜி

ஆ. தமிழ்நாட்டின் முதல் ஆளுநர் - P.C. அலெக்சாண்டர்

**இ. இந்தியாவின் முதல் பெண் பிரதமர் - இந்திரா காந்தி**

ஈ. இந்தியாவின் முதல் ஜனாதிபதி - நேரு

8. பின்வருபவர்களுள் பத்தொன்பதாவது நிதிக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. நீதியரசர் ஏ.என்.ரே **ஆ. நீதியரசர் பி.வி. ரெட்டி**

இ. நீதியரசர் எஸ். எம். சிக்ரி ஈ. நீதியரசர் ஒய்.வி. சந்திரசூட்

9. இந்திய அரசியலமைப்பில் எந்தப் பிரிவு அபூர்வமாகவும், உயிராகவும் திறவு கோலாகவும் இருப்பது?

அ. அடிப்படை உரிமைகள் **ஆ. முகவுரை**

இ. அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள் ஈ. நீதித்துறை சுதந்திரம்

10. அட்டவணை சாதியினருக்கான தகுதியை மதத் தொடர்பில் இருந்து பிரிக்க வேண்டும் என்று கூறிய ஆணையம் எது?

**அ. மதம் மற்றும் மொழி சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையம்**

ஆ. அட்டவணை சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம்

இ. அரசியலமைப்பு மறு ஆய்வு ஆணையம்

ஈ. நிர்வாக சீர்திருத்த ஆணையம்

11. உயர்நீதிமன்றத்தில் தேங்கியுள்ள பணிகளை முடிப்பதற்கு கூடுதல் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் உடையவர் யார்?

**அ. இந்திய குடியரசுத் தலைவர்** ஆ. இந்திய தலைமை நீதிபதி

இ. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஈ. மாநில ஆளுநர்

12. இந்திய அரசியல் சட்டத்தில் 5ம் சட்டப்பிரிவு எதைத் தொடர்பு கொண்டுள்ளது?

அ. இந்திய குடியரசின் தன்மை ஆ. மாநிலங்கள் உருவாக்கும்முறை

**இ. இந்திய குடியுரிமை** ஈ. அரசியல் சட்ட மற்றும் செயல்முறை

13. 'அனைத்திந்திய குடிமை பணிகளின் தந்தை' என அழைக்கப்படுபவர்

அ. ஜவஹர்லால் நேரு **ஆ. சர்தார் வல்லபாய் பட்டேல்**

இ. லால்பகதூர் சாஸ்திரி ஈ. கோத்தாரி

14. 2003ஆம் ஆண்டில் 88-வது அரசியலமைப்புத் திருத்தம் மத்திய மாநில அரசுகளுக்கிடையே எந்த வருவாய் பகிர்வுக்கு முக்கிய மாற்றமாக திகழ்கிறது?

**அ. வரி வருவாய்** ஆ. வருமான வரி

இ.சொத்து வரி ஈ. நில வருவாய்

15. இந்தியாவில் முதன்முதலில் மக்களவைக்கான பொதுத் தேர்தல் 1951-1952ல் நடைபெற்ற போது உறுப்பினர்களின் எண்ணைக்கைக்குரிய இடம்

**அ. 486** ஆ. 500 இ. 534 ஈ. 545

16. முதல் வகுப்புவாரி ஆணை எப்பொழுது வெளியிடப்பட்டது?

**அ. 16 செப்டம்பர், 1921** ஆ. 16 அக்டோபர் , 1921

இ. 16 செப்டம்பர், 1920 ஈ. 16 அக்டோபர், 1920

17. பின்வருபவர்களில், டிசம்பர் மாதம் 4-ந் தேதி 1926 ம் ஆண்டு சென்னை மாகாணத்தில் அமைச்சரவை அமைத்த சுயேச்சை உறுப்பினர் யார்?

அ. P.சுப்பராயலு ரெட்டியார் ஆ. பி.முனுசாமி நாயுடு

**இ. Dr. A. சுப்பராயன்** ஈ. பொப்பிலி ராஜா

18. 2009 ஆம் ஆண்டின் தமிழக திருமண சட்டத்தின் படி, தமிழகத்தில் திருமணங்கள் எத்தனை நாட்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும்?

அ. 7 நாட்கள் ஆ. 30 நாட்கள்

**இ. 90 நாட்கள்** ஈ. 120 நாட்கள்

19. ராவ்-மன்மோகன் இந்திய திட்டமாதிரி எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது?

அ. 1992 ஆ. 1994 இ. 1996 **ஈ. 1997**

20. பின்வருவனவற்றில் எது தவறான கூற்று?

அ. இந்தியாவின் திட்டக்குழு என்பது ஒரு ஆலோசனை அமைப்பு

ஆ. திட்டக்குழு என்பது பாராளுமன்ற சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஒன்று

இ. திட்டக்குழு ஐந்தாண்டு திட்டங்களை உருவாக்குகிறது

**ஈ. திட்டக்குழு ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது**

21. 2010-11 வரவு-செலவு திட்டத்தின் கீழ் வருமான வரி செலுத்தும் பெண் ஊழியரின் வரிவிலக்கு நிர்ணயம்

அ. ரூ. 1,60,000 ஆ. ரூ. 1,80,000 **இ. ரூ.1,90,00** ஈ. ரூ.2,40,000

22. எந்த ஆண்டு தமிழ்நாடு சட்ட மேலவை கலைக்கப்பட்டது?

அ. 1982 **ஆ. 1986** இ. 1987 ஈ. 1989

23. தேசிய மக்களுக்கான கல்வித் திட்டம் எந்த ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது?

அ. 1988 **ஆ. 1980** இ. 1987 ஈ. 1970

24. சர்வ சிக்ஷா அபியான் என்பது இந்தியாவின் ________க்கான திட்டம்

**அ. ஆரம்பக் கல்வி** ஆ. இடைநிலைக் கல்வி

இ. மேல்நிலைக் கல்வி ஈ. உயர் கல்வி

25. இந்தியாவில் பிறப்பிற்கு முன்பே பெண் கருவை கண்டறிந்து கொல்வதை தடை செய்யும் சட்டம் எப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டது?

அ. 1 மார்ச், 1994 ஆ. 1 ஜனவரி, 1994

**இ. 1 ஜனவரி, 1996** ஈ. 1 மார்ச், 1995

26. யானைகள் பாதுகாப்பு திட்டம் இந்திய அரசால் எப்பொழுது தொடங்கப்பட்டது?

அ. 1990-1991 **ஆ. 1991-1992** இ. 1992-1993 ஈ.1993-1994

27. இந்திய குடியுரிமையை எவ்வாறு பெறலாம்?

அ. பிறப்பு மற்றும் பதிவுறு மூலமாக

ஆ. இயற்கையாக மற்றும் ஏதேனும் ஒரு நிலப்பரப்பு இணைவது மூலமாக

இ. வம்சா வழியில் மட்டும்

**ஈ. மேற்கூறிய அனைத்தும் சரி**

28. மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் யாரால் நியமிக்கப்படுகிறார்?

**அ. குடியரசுத் தலைவர்** ஆ. பிரதம அமைச்சர்

இ. முதலமைச்சர் ஈ. ஆளுநர்

29. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986, எதற்கானது?

அ. தனியார் துறை சார்ந்த பொருள் மற்றும் சேவை தொடர்பானது

ஆ. அரசுத் துறை சார்ந்த பொருள் மற்றும் சேவை தொடர்பானது

**இ. அரசு, தனியார் மற்றும் கூட்டுறவு துறை சார்ந்த பொருள் மற்றும் சேவை தொடர்பானது**

ஈ.அரசாங்க பொருள் மற்றும் சேவைக்கானது

30. பட்டியல் 1 பட்டியல் 2 பொருத்துக.

பட்டியல் 1 – மாநில அரசு பட்டியல் 2 – மாநில அவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை

| பட்டியல் 1 – மாநில அரசு | பட்டியல் 2 – மாநில அவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அ. ஆந்திர பிரதேஷ் | 1. 140 |
| ஆ. கர்நாடகா | 2. 234 |
| இ. தமிழ்நாடு | 3. 224 |
| ஈ. கேரளா | 4. 294 |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **3** | **2** | **1** |
| ஆ. | 2 | 3 | 4 | 1 |
| இ. | 4 | 3 | 1 | 2 |
| ஈ. | 1 | 3 | 4 | 2 |

31. பட்டியல் 1 ஐ பட்டியல் 2 உடன் சரியாகப் பொருத்தி கிழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

| பட்டியல் 1(நாடுகள்) | பட்டியல் 2 (பாராளுமன்றம்) |
|---|---|
| அ. இங்கிலாந்து | 1. பெடரல் அசெம்பிளி |
| ஆ. அமெரிக்கா | 2. பாராளுமன்றம் |
| இ. ஜப்பான் | 3. காங்கிரஸ் |
| ஈ. சுவிட்சர்லாந்து | 4. டயட் |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 2 | 3 | 1 |
| **ஆ.** | **2** | **3** | **4** | **1** |
| இ. | 2 | 3 | 1 | 4 |
| ஈ. | 4 | 2 | 1 | 3 |

32. கீழ்க்கண்டவற்றுள் எந்தாரசியலமைப்பு விதியின் படி 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை தொழிற்சாலை மற்றும் சுரங்க வேலைகளில் அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது

அ. விதி 23 **ஆ. விதி 24** இ. விதி 21 A ஈ. விதி 64

33. வரிசை 1 உடன் வரிசை 2வினைப் பொருத்தி, வரிசைகளுக்குக் கீழ் கொடுக்கப்பட்டு தொகுப்பிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்க.

வரிசை 1 வரிசை 2

| தலைமை தேர்தல் ஆணையம் | காலம் |
|---|---|
| அ. எஸ்.எம்.கில் | 1. டிசம்பர் 12, 1990முதல் டிசம்பர் 11, 1996 வரை |
| ஆ. டி.என்.சேஷன் | 2. டிசம்பர் 12, 1996முதல் ஜூலை 12, 2001 வரை |
| இ. டி.எம்.லிங்டோ | 3. நவம்பர் 26, 1990 முதல் டிசம்பர் 11, 1996 வரை |
| ஈ. திருமதி வி.எஸ்.ரமாதேவி | 4. ஜூலை 13, 2001 முதல் ஜூன் 18, 2004 வரை |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **1** | **4** | **3** |
| ஆ. | 1 | 4 | 3 | 2 |
| இ. | 4 | 3 | 2 | 1 |
| ஈ. | 3 | 4 | 1 | 2 |

34. ஒரு புதிய அகில இந்தியப் பணியை உருவாக்குவது

அ.ஒரு அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம்

ஆ. ஒரு செயல்துறை ஆணை மூலம்

**இ. உறுப்பு 312ன் கீழ் பாராளுமன்றத்தின் மேலவையில் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம்**

ஈ. கேபினட் பணி நியமனக் குழுவின் ஆணை மூலம்

35. பின்வருவனவற்றுள் எவ்வொன்று தேச நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்துவதற்கு போதுமான காரணமாக கருதப்பட இயலாது?

அ. போர் ஆ. வெளிநாட்டு ஆக்கிரமிப்பு

இ. ஆயுதக் கலவரம் **ஈ. உள்நாட்டுக் குழப்பம்**

36. கீழே கொடுக்கப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்களில் எந்த திருத்தத்தின்படி இந்தியக் குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் கட்டாயம்செயல்பட வேண்டும்?

**அ. 42வது அரசியலமைப்புத் திருத்தம்** ஆ. 44வது அரசியலமைப்புத் திருத்தம்

இ. 45வது அரசியலமைப்புத் திருத்தம் ஈ. 46வது அரசியலமைப்புத் திருத்தம்

37. கீழ்க்கண்ட வாக்கியங்களில் எவை/எவைகள் தவறானவை?

1. ஆப்பிள் பீ குழு 1953ல் அமைக்கப்பட்டது

2. ஏ.டி.கோர்வாலா அவர்களின் பரிந்துரைக்குப் பிறகு இந்தியப் பொது நிர்வாக அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது

3. அரசுத்துறையில் அமைப்பு மற்றும் முறைப் பிரிவினை ஏற்படுத்த வேண்டும் என என்.கோபால் சுவாமி ஐயங்கார் குழு பரிந்துரைத்தது.

4. அரசு பொது நிறுவனங்களின் திறமையான நடைமுறை பற்றிய அறிக்கையினை அசோக் சந்தா குழு சமர்பித்தது.

அ. 1 மற்றும் 2 ஆ. 1 மற்றும் 3 **இ. 2 மற்றும் 4** ஈ. 2 மற்றும் 3

38. கீழே கொடுக்கப்பட்டவைகளில் ஆட்சித்துறை தீர்ப்பாயங்களின் தீமை எது?

1. விரைவான, மலிவான நீதி வழங்குகிறது.
2. சட்டத்தின் ஆட்சிக் கோட்பாட்டை மீறுகிறது.
3. மூத்த அதிகாரவர்க்கத்தினரால் நிர்வகிக்கப்படுகிறது
4. நெகிழும் தன்மையுள்ள விதிமுறைகளைப் பெற்றுள்ளது.

அ. 2 மட்டும் ஆ. 3 மற்றும் 4

இ. 1, 3 மற்றும் 4 **ஈ. 4 மட்டும்**

39. (பொது) அரசு ஊழியர்களின், தவறான நடத்தை தவறான செயல்பாடுகள், ஊழல் போன்றவற்றைக் கட்டுப்படுத்த இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் எவை?

1. மத்திய கண்காணிப்புக் குழு 2. லோக்பால்
3. சிறப்புக் காவல் அமைப்பு 4. மத்திய புலனாய்வுப் பிரிவு

அ. 2 மற்றும் 3 **ஆ. 1 மற்றும் 4**

இ. 1 மற்றும் 3 ஈ. 3 மற்றும் 4

40. பின்வருவனவற்றை பொருத்துக:

அ. அரசியலமைப்பு பகுதி – II 1. அரசு நெறிமுறைகளைக் கொள்கை

ஆ. அரசியலமைப்பு பகுதி – IV 2. மாநிலாரசாங்கம்

இ. அரசியலமைப்பு பகுதி – VI 3. சட்டத்திருத்தம்

ஈ. அரசியலமைப்பு பகுதி – XX 4. குடிமக்கள்

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **1** | **2** | **3** |
| ஆ. | 4 | 1 | 3 | 2 |
| இ. | 1 | 4 | 2 | 3 |
| ஈ. | 2 | 1 | 4 | 3 |

41. பொருத்துக.

அ. 24வது சட்டத்திருத்தம் 1. சொத்துரிமை நீக்கம்

ஆ. 42வது சட்டத்திருத்தம் 2. கட்சித் தாவல் தடைச் சட்டம்

இ.44வது சட்டத்திருத்தம் 3. அடிப்படைக் கடமைகள்

ஈ. 52வது சட்டத்திருத்தம் 4. அடிப்படை உரிமைகள் மீதான பாராளுமன்றத்தின் அதிகாரம்

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 3 | 2 | 1 |
| ஆ. | 3 | 4 | 2 | 1 |
| **இ.** | **4** | **3** | **1** | **2** |
| ஈ. | 1 | 4 | 3 | 2 |

42. பொருத்துக.

அ. ஆறாவது ஊதிய ஆணையம் 1. தரம் வீரர்

ஆ. பொருளாதார சீர்திருத்த ஆணையம் 2. ஜே.பி. க்ரிப்லானி

இ. தேசிய காவல் ஆணையம் 3. எல்.கே.ஜா

ஈ. இரயில்வே லஞ்ச விசாரணைக்குழு 4. பி.என்.பாலகிருஷ்ணா

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **3** | **1** | **2** | **4** |
| ஆ. | 2 | 3 | 4 | 1 |
| இ. | 4 | 2 | 1 | 3 |
| ஈ. | 4 | 3 | 1 | 2 |

43. கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேசம் மாநிலங்கள் பெண்களின் நில உடமை தரத்தை உயர்த்துவதற்குகொண்டு வந்த சட்டத்திருத்தம்

**அ. ஹிந்து தொடர்ச்சி சட்டம், 1956** ஆ. ஹிந்து தொடர்ச்சி சட்டம், 1967

இ. ஹிந்து தொடர்ச்சி சட்டம், 1981 ஈ. ஹிந்து தொடர்ச்சி சட்டம், 1996

44. கீழ்க்காண்பனவற்றுள் 1935 ஆம் ஆண்டு சீர்திருத்தச் சட்டத்துடன் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக.

அ. மாநில சுயாட்சி ஆ. அகில இந்திய கூட்டாட்சி

இ. மத்தியில் இரட்டையாட்சி **ஈ. மாநிலங்களில் இரட்டையாட்சி**

45. பஞ்சாயத்து ராஜ் முறையினை இந்தியாவில் முதல்முறையாக முழுமையாக நடைமுறைப்படுத்திய மாநிலம் எது?

அ. ஆந்திரபிரதேசம் **ஆ. ராஜஸ்தான்**

இ. தமிழ்நாடு ஈ. மகாராஷ்டிரா

46. பொருத்துக.

அ. பல்வந்த்ராய் மேத்தா குழு 1. 1978

ஆ. சமுதாய வளர்ச்சி திட்டம் 2. 1957

இ. அசோக் மேத்தா குழு 3. 1952

ஈ. 73வது அரசியலமைப்புத் திருத்தம் 4. 1993

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| ஆ. | 2 | 3 | 4 | 1 |
| **இ.** | **2** | **3** | **1** | **4** |
| ஈ. | 1 | 3 | 4 | 2 |

47. கீழ்க்கண்டவற்றுள் எந்த மொழி அட்டவணை எட்டில் சேர்க்கப்படவில்லை?

அ. மெய்திலி ஆ. டோக்ரி

**இ. துளு** ஈ. சாந்தாளி

48. RTE சட்டம் சம்பந்தமாக பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

1. 6 -14 வயதுடையவர்களுக்கானது

2. கட்டாய மற்றும் இலவச கல்விக்கான சட்ட பூர்வ அந்தஸ்து

3. 14-18 வயதுடையவர்களுக்கானது

4. பெண் மாணவிகளுக்கு மட்டும் உரியது

**அ. 1 மற்றும் 4** ஆ. 4 மட்டும்

இ. 3 மட்டும் ஈ. 3 மற்றும் 4

49. ‘ஜன்னி சுரக்ஷ யோஜனா’ பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

1. இத்திட்டம் தாய் மற்றும் சேய் இறப்பினை குறைக்கும் இரு நோக்கங்களை கொண்டது

2. இத்திட்டம் 100 சதவீதம் மைய அரசினால் செயல்படுத்தப்படுகிறது.

3. மருத்துவ உதவியோடு பண உதவியும் அளிக்கப்படுகிறது.

அ. 1மட்டும் சரி ஆ. 2 மட்டும் சரி

இ. 3 மட்டும் சரி **ஈ. 1, 2, மற்றும் 3 சரி**

50. ‘அனைத்தும் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்’ பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

1. கிராம பஞ்சாயத்துகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்க 2006-07 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது

2. இத்திட்டம் பணக்கார மற்றும் மிகையான தல வருவாய் கொண்ட கிராமபஞ்சாயத்துகளிம் முன்னுரிமையளிக்கின்றது.

**அ. 1சரி ஆனால் 2 தவறு** ஆ. 1 மற்றும் 2 சரி

இ. 1 மற்றும் 2தவறு ஈ. இதில் எதுவுமில்லை

51. இந்தியாவின் தேசிய நீர்வள மன்றத்தின் தலைவர்

**அ. பிரதமர்** ஆ. நீர்வளத்துறை அமைச்சர்

இ. சுற்றுப்புற மற்றும் காடுகள் துறை அமைச்சர்

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர்

52. 1978 ம் வருடத்திய 44வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் மூலம் குடியரசுத் தலைவர் தேச நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்த எதன் ஆலோசனையை ஏற்று செயல்பட வேண்டும்?

அ.ஒட்டு மொத்த யூனியன் அமைச்சரவையின் கூட்ட ஆலோசனையை

**ஆ. யூனியன் காபினட்டின் ஆலோசனையை**

இ. இந்திய தலைமை வழக்குரைஞரின் ஆலோசனையை

ஈ. உச்சநீதிமன்றத்தின் ஆலோசனையை

53. ஒரு மக்களாட்சி நாட்டில்,ஒரு குடிமைப் பணியாளர் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டியது

1. அரசியலமைப்பின் குறிக்கோள்கட்கு
2. பொது நலத்திற்கு
3. ஆளுங்கட்சியின் கொள்கைகட்கு
4. பொதுக் கொள்கைகளை செயல்படுத்துவதற்கு

பின்வரும் குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

குறியீடு:

அ. 1,3 மற்றும் 4 ஆ. 2,3 மற்றும் 4

இ. 1,2 மற்றும் 3 **ஈ. 1,2 மற்றும்** 4

54. பின்வருவனவற்றுள் எதில் மாநிலங்கள் அவை மக்கள் அவையுடன் சம அதிகாரம் கொண்டுள்ளது?

அ. புதிய அகில இந்தியப் பணிகள் உருவாக்கலில்

**ஆ. அரசியலமைப்பைத் திருத்துவதில்**

இ. அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்வதில்

ஈ. வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிவதில்

55. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் எது/எவை பணியாளர் மற்றும் ஆட்சித் துறை இலாக்காவின் பணி இல்லை?

1. அரசாங்கத்திற்கு கொள்கை அளவில் ஆலோசனை வழங்குகிறது
2. நிர்வாக ஆலோசனையைப் பொது நிறுவனங்களுக்கு வழங்குகிறது.

3. நிர்வாகக் கல்வி மற்றும் செய்திகளை வழங்குகிறது

4. பல்வேறு ஆட்சித்துறை இலாக்காக்களை மேற்பார்வை செய்கிறது.

அ. 1, 2 மற்றும் 3 ஆ. 2 மற்றும் 3

**இ. 4 மட்டும்** ஈ. 3 மட்டும்

56. அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு 356 ஐ பயன்படுத்தி குடியரசுத் தலைவர் ஒரு மாநிலத்தில் நெருக்கடி நிலையை பிரயோகிக்கும் போது அந்த மாநிலம் எத்தகைய விளைவைச் சந்திக்கும்?

அ. அம்மாநிலத்தின் சட்டமன்றம் தானாகவே கலைந்து விடும்

ஆ. உறுப்பு 19 வழங்கும் குடிமக்கட்கான சுதந்திர உரிமை தானாகவே முடங்கி விடும்

**இ. மாநிலப் பட்டியலில் உள்ள பொருளின் மீது மத்திய பாராளுமன்றம் சட்டமியற்றும் அதிகாரத்தை தன்னிச்சையாகப் பெற்று விடும்**

ஈ. அம்மாநில ஆளுநருக்கு மாநிலப் பட்டியலில் உள்ள பொருளின் மீது சட்டமியற்றும் அதிகாம் கிடைத்துவிடும்

57. 1955 ஆம் ஆண்டில் அலுவலக மொழிவாரியக் குழுவின் தலைவர் யார்?

**அ. சர்.பி.ஜி.கெர்** ஆ. கோத்தாரி

இ. முதலியார் ஈ. பல்வந்த்ராய் மேத்தா

58. இந்திய அரசியலமைப்பின் எந்த பாகம் தேர்தல் ஆணையம் பற்றி கூறுகிறது?

அ. பாகம் III **ஆ. பாகம் XV** இ. பாகம் XX ஈ. பாகம் XXII

59. இந்திய நிலப்பரப்பில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் சடப்படி சமமான பாதுகாப்பு என்பவைகள் எந்தப் பிரிவின்படி பராமரிக்கப்படுகிறது?

அ. பிரிவு 15 ஆ. பிரிவு 16 **இ. பிரிவு 14** ஈ. பிரிவு 17

60. நிதிமசோதா தொடர்பாக பின்வருவனவற்றுள் தவறான கருத்தினை சுட்டிக் காண்பிக்கவும்.

அ. நிதி மசோதாவினை அறிமுகப்படுத்த குடியரசுத் தலைவரின் முன் அனுமதி தேவை

ஆ. மக்களவையில் மட்டுமேநிதி மசோதாவை அறிமுகப்படுத்த முடியும்.

இ. அனுப்பிய நாட்களிலிருந்து 14 நாட்களுக்குள் மாநிலங்களவை நிதி மசோதாவை நிறைவேற்ற வேண்டும்

**ஈ. நிதி மசோதா மாநிலங்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்**

61. இந்திய தேர்தல் ஆணையம் பற்றிய கீழ்க்கண்ட சொற்றொடர்களில் எவை/எவைகள் தவறானவை?

1. தேர்தல் ஆணையம், பாராளுமன்ற சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று

2. தேர்தல் ஆணையம் என்பது அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட அமைப்பு

3. தேர்தலுக்கு நிற்பவரின் விண்ணப்ப தாளினை, முன்மொழிபவர் கொண்டு வந்து தரும் பட்சத்தில் அதனை தேர்தல் ஆணையம் ரத்து செய்யும்

4. ஜனாதிபதியினை நீக்குவது தொடர்பான விவகாரங்களில் தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு

அ. 1 மற்றும் 3 மட்டும் ஆ. 2 மற்றும் 3 மட்டும்

இ. 3 மற்றும் 4 மட்டும் **ஈ. 1 மற்றும் 4 மட்டும்**

62. இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் எந்த சரத்தின் அடிப்படையில் இந்திய அரசாங்கம் பாரத் ரத்னா, பத்ம ஸ்ரீ விருதுகளை உருவாக்கியது?

அ. சரத்து 14 ஆ. சரத்து 16 **இ. சரத்து 18** ஈ. சரத்து 21

63. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தை பொறுத்த வரை உண்மையானது

1. 1964-ல் ஊழல் ஒழிப்பிற்கான சந்தானம் குழு பரிந்துரை

2. இது ஒரு ஆலோசனை அமைப்பு

3. தனக்கென்று சொந்த புலனாய்வு அமைப்பு இல்லை

அ. 1 மட்டும் ஆ. 3 மட்டும்

இ. 1 மற்றும் 3 மட்டும் **ஈ. 1, 2 மற்றும் 3**

64. மாநிலத்தில் உள்ள நிர்வாக மட்டங்களின் சரியான ஏறுவரிசை எது?

அ. செயலகம் – இயக்குநரகம் – கோட்டம்- மாவட்டம்

ஆ. இயக்குநரகம் – செயலகம் –கோட்டம் – மாவட்டம்

இ. செயலகம் – கோட்டம் – மாவட்டம் – இயக்குநரகம்

**ஈ. கோட்டம் –மாவட்டம்- இயக்குநரகம் – செயலகம்**

65. பின்வருவனவற்றுள் எது இந்தியாவிலுள்ள மாநிலங்களில் இல்லாத நகராட்சி பணியாளர் முறைமை வகை?

அ. தனிப்பட்ட பணியாளர் முறைமை

ஆ. ஒருமித்த பணியாளர் முறைமை

இ. ஒருங்கிணைந்த பணியாளர் முறைமை

**ஈ. மேம்படுத்தப்பட்ட பணியாளர் முறைமை**

66. அரசின் வளர்ந்து வரும் சமூக – பொருளாதார பணிகள், அரசாங்க அதிகாரம் அதிகரிப்பு மற்றும் சமூக, நல அரசு கொள்கை ஏற்றல்; ஆகியவற்றின் காரணமாக உருவாகிய சட்டம் யாது?

அ. குடிமை சட்டம் ஆ. குற்றவியல் சட்டம்

இ. தனியார் சட்டம் **ஈ. நிர்வாகச் சட்டம்**

67. கீழ்க்கண்டவர்களுள் யார் மாநில அரசாங்கத்தின் ஒரே பிரதிநிதியாக மாவட்டத்தில் இருக்கிறார்?

அ. ஜிலா பரிஷத்தின் தலைவர்

ஆ. அம்மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்

இ. கோட்ட ஆணையாளர்

**ஈ. மாவட்ட ஆட்சியர்**

68. நிதி நெருக்கடி நிலை குறித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்றொடர்களை கூர்மையாகக் கவனித்து எந்த சொற்றொடர்கள் சரியானவை எனக் குறிப்பிடுக.

1. நிதி நெருக்கடி நிலைப்பிரகடனம் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2. அப்பிரகடனம் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் 6மாத காலத்திற்குள் ஒப்புதல் பெறவில்லையெனில் பிரகடனப்படுத்தப்பட்ட நிதி நெருக்கடி நிலை முடிவுக்கு வந்துவிடும்.

**அ. 1 மட்டும்** ஆ. 2 மட்டும்

இ. 1 மற்றும் 2மட்டும் ஈ. 1 மற்றும் 2 ம் தவறானவை

69. அரசுப் பணிகளில் ஊழல் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் உச்ச கட்டம் என்ற நிலையிலிந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட உயர் மட்டக் குழுவின் தலைவர்

1. கே. சந்தானம் 2. எ. அய்யங்கார்

3. பி.வி.சுப்பையா 4. கே. ஹனுமந்தையா

அ. 2 ஆ. 4 **இ.1** ஈ. 3

70. வரிசை 1உடன் வரிசை 2 வினைப் பொருத்தி வரிசைகளுக்கு கீழ் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| வரிசை 1 | வரிசை 2 |
|---|---|
| அ. செயல்துறை | 1. கணக்குகளை சரி பார்த்தல் |
| ஆ. சட்டத்துறை | 2. கொள்கை செயல்படுத்தல் |
| இ. நிதி அமைச்சகம் | 3. நிதி வழங்கல் |
| ஈ. தணிக்கைத் துறை | 4. நிதி செலவினங்களை கட்டுப்படுத்தல் |
| | 5. கணக்கு வைத்தல் |

குறியிடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **3** | **4** | **1** |
| ஆ. | 3 | 4 | 5 | 2 |
| இ. | 5 | 2 | 4 | 3 |

ஈ. 2 3 1 4

71. எந்த அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் மூலம் கல்வி கற்கும் உரிமை வழங்கப்பட்டது?

**அ. 86 வது** ஆ. 87-வது இ. 88-வது ஈ. 89-வது

72. மாநில சட்டசபைக் கலைப்பு இந்திய அரசியல் அமைப்பின் எந்த விதியின்படி மேற்கொள்ளப்படுகிறது?

அ. விதி 170 **ஆ. விதி 171** இ. விதி 352 ஈ. விதி 356

73. பின்வரும் வார்த்தைகள் 1949 நவம்பர் 26ல் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியலைப்பில் இடம் பெறவில்லை

**அ. சமதர்மம்** ஆ. குடியரசு

இ. இறையாண்மை ஈ. மக்களாட்சி

74. மாநகராட்சியின் முதன்மை செயலதிகாரி யார்?

அ. மேயர் **ஆ. மாநகராட்சி ஆணையர்**

இ. துணை மேயர் ஈ. முதலமைச்சர்

75. மாநகராட்சியின் அரசியல் நீதியான தலைவர்

அ. பெருந்தலைவர் ஆ. ஆணி அயர்

**இ. மேயர்** ஈ. மாவட்டப் பஞ்சாயத்து தலைவர்

76. கூற்று (A) : உரிமைகளை அனுபவிப்பதென்பது கடமைகளை நிறைவேற்றும் நிபந்தனைக்குட்பட்டது.

காரணம் (R): தனிநபர் தன் கடமைகளை நிறைவேற்றாத பட்சத்தில்,சமூகத்தால்,தனிநபரின் நலனை பாதுகாக்க இயலாது.

**அ. (A) மற்றும் ® இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஆ. (A) மற்றும் ® இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) சரி

77. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியக்களில் சரியானவை எது?

1. மத்திய கண்காணிப்பு ஆணையம், சந்தானம் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அமைக்கப்பட்டது?

2.மத்திய கண்காணிப்பு ஆணையம் பொதுப் பணித்துறை அதிகாரிகளின் ஊழல் விவகாரங்களை கண்காணிக்கும் ஒரு சுயேட்சியான நிறுவனம்

அ. 1 உண்மை ஆனால் 2 தவ்று **ஆ. 1 மற்றும் 2 உண்மை தான்**

இ. 1 மற்றும் 2 தவறு ஈ. 2 சரி ஆனால் 1 தவறு



winmeen.com

78. பின்வருவனவற்றை பொருத்துக.

| விதி | உள்ளடக்கம் |
|---|---|
| அ.விதி – 5 | 1. பாகிஸ்தானுக்குஇடம் பெயர்ந்தோரின் குடியுரிமைகள் |
| ஆ. விதி- 6 | 2. அரசியலமைப்பின் தொடக்க காலத்திலிருந்த குடியுரிமை |
| இ. விதி – 7 | 3. இந்தியாவிற்கு வெளியே வசித்து வரும் இந்திய வம்சா வழியினரின் குடியுரிமை |
| ஈ. விதி -8 | 4. பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடியேறியவர்களின் குடியுரிமை |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 3 | 1 | 4 |
| **ஆ.** | **2** | **4** | **1** | **3** |
| இ. | 2 | 1 | 4 | 3 |
| ஈ. | 2 | 4 | 3 | 1 |

79. பட்டியல் 1 உடன் பட்டியல் 2 ஐப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. விதி 44 | 1. குழந்தைகள் கட்டாய இலவசக் கல்வி பெறுவதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. |
| ஆ. விதி 45 | 2. பட்டியல் இனத்தவர் மற்றும் நலிந்தோரின் கல்வி மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவது |
| இ. விதி 46 | 3. குடிமக்களுக்கு சீரான உரிமையியல் நடைமுறை |
| ஈ.விதி 47 | 4. சத்துணவு தரத்தை உயர்த்துதல், வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் மூலம் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவது அரசின் கடமை |

குறியீடுகள்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 2 | 3 | 1 |
| ஆ. | 3 | 2 | 1 | 4 |
| இ. | 1 | 2 | 4 | 3 |
| **ஈ.** | **3** | **1** | **2** | **4** |

80. எந்த ஆண்டு அலுவலகமொழி மசோதா திருத்தப்பட்டது?

**அ. 1961** ஆ. 1958 இ. 1967 ஈ. 1966

81. பட்டியல் 1லிருந்து பட்டியல் 2 ஐ பொருத்துக.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. ஜி.வி.மாவலங்கர் | 1. முதல் இந்திய முதன்மை கணக்கு மற்றும் தணிக்கையாளர் |
| ஆ. சுகுமார்சென் | 2. முதல் இந்திய துணை பிரதமர் |
| இ. வி. நர்ஹரி ராவ் | 3. முதல் இந்திய மக்களவை தலைவர் |
| ஈ. சர்தார் வல்லபாய் படேல் | 4. முதல் இந்திய முதன்மை தேர்தல் ஆணையர் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 1 | 4 | 2 |
| ஆ. | 1 | 2 | 3 | 4 |
| **இ.** | **3** | **4** | **1** | **2** |
| ஈ. | 4 | 3 | 2 | 1 |

82. இந்திய அரசியல் சாசனத்தின் எந்த பகுதியை இந்திய மக்களின் "மேக்னா கார்டா" என்று குறிப்பிடப்படுகிறது?

அ. அரசியல் வழிகாட்சி நெறிகள் ஆ அடிப்படை கடமைகள்

**இ. அடிப்படை உரிமைகள்** ஈ. சுதந்திரமான நீதித்துறை

83. 95 வது அரசியல் அமைப்பு திருத்த சட்டம் 2010ன் முக்கியத்துவம்

**அ. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு நீடிப்பு**

ஆ. சத்திஸ்கர் புதிய மாநிலம் உதயம்

இ. சமூகத்தில் பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு

ஈ. கல்வியில் பின்தங்கியவர்களுக்கு இடஒதுக்கீடு

84. வரிசை 1 உடன் வரிசை 2 னைப் பொருத்தி வரிசைகளுக்கு கீழ்கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.

| வரிசை 1 (அரசாங்கத்தின் வகை) | வரிசை 2 (அடிப்படைகள்) |
|---|---|
| அ. காபினட் அரசாங்கம் | 1. அதிகாரப் பிரிவினை |
| ஆ. குடியரசுத் தலைவர் | 2. கூட்டுப் பொறுப்பு |
| இ. கூட்டாட்சி அரசாங்கம் | 3. அதிகார குவிப்பு |
| ஈ. ஒற்றையாட்சி அரசாங்கம் | 4. அதிகார பகிர்வு |
| | 5. நிர்வாக சட்டம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 4 | 2 | 1 |
| **ஆ.** | **2** | **1** | **4** | **3** |

| | | | | |
|---|---|---|---|---|
| இ. | 3 | 4 | 1 | 2 |
| ஈ. | 4 | 3 | 2 | 5 |

85. 42-வது அரசியலமைப்பு திருத்த சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

அ. 1947 ஆ. 1950 இ.1963 **ஈ. 1976**

86. கீழ்க்கண்டவற்றுள் எது 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் கூறு இல்லை?

அ.மாநில சுயாட்சி ஆ. அனைத்திந்திய கூட்டாட்சி

இ. மத்தியில் இரட்டையாட்சி **ஈ. மாநிலத்தில் இரட்டையாட்சி**

87. காமராஜரின் பிரபலமான கொள்கை

அ. 'எஸ்' திட்டம் ஆ. 'எல்' திட்டம்

**இ. 'கே' திட்டம்** ஈ. 'ஜெ' திட்டம்

88. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனிக்கவும்.

கூற்று (A): இந்திய அரசியலமைப்பு தொடக்கத்தில் ஏழு அடிப்படை உரிமைகளைக் கொண்டிருந்தது. தற்போது ஆறு அடிப்படை உரிமைகள் தான் உள்ளன.

காரணம்®: 1978ல் 44வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, சொத்துரிமையானது அடிப்படை உரிமையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு விட்டது.

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

**அ. கூற்று மற்றும் காரணம் சரி, கூற்றுக்கான காரணம் சரி**

ஆ. கூற்று மற்றும் காரணம் சரி கூற்றுக்கான காரணம் தவறு

இ. கூற்று சரி காரணம் தவறு

ஈ. கூற்று தவறு, காரணம் சரி

89. பொருத்துக.

அ. குடியரசுத் தலைவர் 1. மாநிலத்தின் உண்மையான தலைவர்

ஆ. பிரதம அமைச்சர் 2. இந்தியாவின் முதல் குடிமகன்

இ. முதலமைச்சர் 3. மாநிலத்தின் பெயரளவுத் தலைவர்

ஈ. ஆளுநர் 4. இந்திய அரசாங்கத்தின் தலைவர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| **ஆ.** | **2** | **4** | **1** | **3** |
| இ. | 2 | 1 | 3 | 4 |
| ஈ. | 4 | 2 | 3 | 1 |

90. பட்டியல் 1 ஐ பட்டியல் 2உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. அடிப்படை கடமைகள் | 1. பகுதி IV |
| ஆ.அரசு நெறிமுறைப்படுத்தும் கோட்பாடுகள் | 2. பகுதி IV-அ |
| இ. கிராக பஞ்சாயத்து | 3. பகுதி IX-அ |
| ஈ. நகர்புற உள்ளாட்சி | 4. பகுதி IX |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| **ஆ.** | **2** | **1** | **4** | **3** |
| இ. | 3 | 4 | 2 | 1 |
| ஈ. | 4 | 1 | 2 | 3 |

91. மனிதனின் இருதயமும் உயிர்சக்தியும் எனகருதப்படும் விதி யாது?

அ. விதி 46 ஆ. விதி 42 **இ. விதி 32** ஈ. விதி 35

92. பொருத்துக.

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| அ. தேசிய நெருக்கடி நிலை | 1. அங்கம் 360 |
| ஆ. மாநில நெருக்கடி நிலை | 2. அங்கம் 352 |
| இ. நிதி நெருக்கடி நிலை | 3. அங்கம் 356 |

| | அ | ஆ | இ |
|---|---|---|---|
| அ. | 3 | 2 | 1 |
| **ஆ.** | **2** | **3** | **1** |
| இ. | 2 | 1 | 3 |
| ஈ. | 3 | 1 | 2 |

93. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனிக்கவும்.

1. மாநில நிர்வாகத்தின் நரம்பு மண்டலமாக செயலகம் உள்ளது.
2. இந்திய நிர்வாகத்தின் அடிப்படை அலகாக மாவட்டம் உள்ளது
3. மாவட்ட நிர்வாகத்தின் தலைவராக மாவட்ட ஆட்சியாளர் உள்ளார்
4. மாநில நிர்வாகத்தின் தலைவராக ஆளுநர் உள்ளார்

இவற்றுள் எது தவறு?

அ. 3 மட்டும் தவறு **ஆ. 4 மட்டும் தவறு**

இ. 1 மற்றும் 2 தவறு ஈ. 3 மற்றும் 4 தவறு

94. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. இந்திய அரசியலமைப்பு, எழுதப்பட்ட அரசியலமைப்பு

2. இந்திய அரசியலமைப்பு நெகிழும்,நெகிழா இயல்புடையது

3. இந்திய அரசியலமைப்பு மதசார்பற்ற அரசை உடையது

4. இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி முறை அரசுக்கு எதிரானது

அ. 1 மட்டும் சரி ஆ. 2 மட்டும் சரி

இ. 12, மற்றும் 4 மட்டும் சரி **ஈ. 1, 2 மற்றும் 3 மட்டும் சரி**

95. பொருத்துக.

அ. விதி 153 1. தேசிய அவசர நிலை

ஆ. விதி 163 2. ஆளுநர்

இ. விதி 352 3. மாநில அவசர நிலை

ஈ. விதி 356 4. முதலமைச்சர்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 2 | 4 | 1 |
| ஆ. | 1 | 3 | 4 | 2 |
| இ. | 4 | 3 | 2 | 1 |
| **ஈ.** | **2** | **4** | **1** | **3** |

96. வாக்கியங்களை கவனி:

கூற்று (A): அடிப்படை கடமைகளுக்கு சட்டப் பூர்வமான அங்கீகாரம் கிடையாது.

காரணம் (R): நீதிமன்றங்கள் அடிப்படைக் கடமைகள் செயல்படுத்தப்படுமாறு நிர்பந்திக்கவியலாது.

**அ. (A) மற்றும் ® இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஆ. (A) மற்றும் ® இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) சரி

97. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனிக்கவும்.

1. 73வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் இந்திய அரசியல் சாசனத்தின் பகுதி IX ல் சில அம்சங்களை சேர்த்தது

2. இதன் மூலம் மாநில அரசுக்கு கிராம நிலையில் பஞ்சாயத்து நிறுவனங்களையும், மாவட்டங்களில் உயர்நிலை பஞ்சாயத்து அமைக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டது

கீழ்க்கொடுக்கப்பட்டதிலிருந்து சரியான விடையை தெரிவு செய்யவும்

**அ. 1 மற்றும் 2 இரண்டுமே சரி** ஆ. 1 சரி ஆனால் 2தவறு

இ. 1 மட்டும் சரி ஈ. 2 மட்டும் சரி

98. கூற்று (A): டில்லி முழுமையான மாநிலத்திற்குரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை.

காரணம் (R): இந்தியாவின் தலைநகரமாக டில்லி விளங்குவதால் அது சிறப்பு அந்தஸ்தினைப் பெற்றுள்ளது.

**அ. (A) மற்றும் ® இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்**

ஆ. (A) மற்றும் ® இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

இ. (A) சரி ஆனால் (R) தவறு

ஈ. (A) தவறு ஆனால் (R) சரி

99. நிர்வாக தீர்ப்பாயத்தைப் பற்றிய அரசியலமைப்பு சரத்து

அ. சரத்து 323 **ஆ. சரத்து 323 A** இ. சரத்து 323 B ஈ. சரத்து 321

100. பின்வருவனவற்றில் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62 லிருந்து 65 வயது வரை உயர்த்திய சட்டத்திருத்தம் எது?

**அ. 104 வது சட்டத்திருத்தம்** ஆ. 101 வது சட்டத்திருத்தம்

இ. 102 வது சட்டத்திருத்தம் ஈ. 103 வது சட்டத்திருத்தம்

winmeen.com